www.freetnbooks.com

12 - ஆம் வகுப்பு

பதிவு எண். 1 2 3 0 1 - X

# அரையாண்டுத் தேர்வு - 2025

நேரம்: 3:00 மணி **வரலாறு** மதிப்பெண்கள்: 90

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 20 x 1 = 20

1. இந்தியாவின் 'முதுபெரும் மனிதர்' என அழைக்கப்படுபவர்
(அ) பாலகங்காதர திலகர் (ஆ) M.K. காந்தி
(இ) தாதாபாய் நௌரோஜி (ஈ) சுபாஷ் சந்திர போஸ்
2. **கூற்று:** 1905 அக்டோபர் 16 துக்க நாளாக அனுசரிக்கப்பட்டது.
**காரணம்:** மேற்படி நாளில் வங்காளம் முறைப்படி இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.
(அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
(இ) கூற்று சரி, காரணம் தவறு (ஈ) கூற்று தவறு, காரணம் சரி
3. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார்?
(அ) பி.பி. வாடியா (ஆ) ஜவஹர்லால் நேரு (இ) லாலா லஜபதிராய் (ஈ) சி.ஆர். தாஸ்
4. காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
(அ) திலகர் (ஆ) கோகலே (இ) W.C. பானர்ஜி (ஈ) M.G. ரானடே
5. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது (இந்திய மண்ணில்)?
(அ) 1920 (ஆ) 1925 (இ) 1930 (ஈ) 1935
6. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க.

| பட்டியல் I | பட்டியல் II | | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|---|---|
| (அ) அன்னிபெசண்ட் | 1. அலிகார் இயக்கம் | அ) | 3 | 1 | 4 | 2 |
| (ஆ) சையது அகமது கான் | 2. தயானந்த சரஸ்வதி | ஆ) | 1 | 2 | 3 | 4 |
| (இ) கிலாபத் இயக்கம் | 3. பிரம்மஞான சபை | இ) | 4 | 3 | 2 | 1 |
| (ஈ) சுத்தி இயக்கம் | 4. அலி சகோதரர்கள் | ஈ) | 2 | 3 | 4 | 1 |

7. இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர் ________ ஆகும்.
(அ) சுபாஷ் படைப்பிரிவு (ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு
(இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு (ஈ) ஜான்சி ராணி படைப்பிரிவு
8. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசிய வானொலி நிலையத்தை நடத்தியவர் யார்?
(அ) உஷா மேத்தா (ஆ) பிரீத்தி வதேதார் (இ) ஆசப் அலி (ஈ) கேப்டன் லட்சுமி
9. மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள்
(அ) ஜனவரி 30, 1948 (ஆ) ஆகஸ்ட் 15, 1947 (இ) ஜனவரி 30, 1949 (ஈ) அக்டோபர் 2, 1948
10. பி.ஆர். அம்பேத்காரை எந்த தொகுதியிலிருந்து தேர்ந்தெடுப்பதைத் காங்கிரஸ் உறுதி செய்தது?
(அ) அமேதி (ஆ) பம்பாய் (இ) நாக்பூர் (ஈ) மகவ்
11. 2015-இல் திட்டக்குழு கலைக்கப்பட்டு அதற்குப் பதிலாக ________ எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP)
(ஆ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் (MGNREGA)
(இ) ஊரக வளர்ச்சித் திட்டங்கள் (RDD) (ஈ) நிதி அயோக்
12. பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்
(அ) ராம் மனோகர் லோகியா (ஆ) ஜெயபிரகாஷ் நாராயணன்
(இ) வினோபா பாவே (ஈ) சுந்தர்லால் பகுகுணா
13. கீழ்க்கண்டவற்றில் எது சுதந்திரமான வர்த்தக நகரம் இல்லை?
(அ) நூரெம்பெர்க் (ஆ) ஆண்ட்வெர்ப் (இ) ஜெனோவா (ஈ) செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்
14. 1889 இல் 324 மீட்டர் உயரமுள்ள ஈபிள் கோபுரத்தை ________ நகரில் எழுப்பினர்.
(அ) பெர்லின் (ஆ) லண்டன் (இ) பாரிஸ் (ஈ) அமெரிக்கா
15. ________ நகரம் 'காட்டன் பொலிஸ்' எனும் புனைப் பெயரைப் பெற்றது.
(அ) மான்செஸ்டர் (ஆ) லங்காசயர் (இ) லிவர்பூல் (ஈ) கிளாஸ்கோ
16. "இரு உலகங்களின் நாயகன்" என கொண்டாடப்பட்டவர் ________ ஆவார்.
(அ) சார்லஸ் ஆல்பர்ட் (ஆ) பிஸ்மார்க் (இ) மூன்றாம் நெப்போலியன் (ஈ) கரிபால்டி
17. **கூற்று:** J.G. ஃபிக்ட் ஜெர்மானியர்களிடையே தேசியவாதத்தை ஊட்டினார்.
**காரணம்:** ஃபிக்ட் 'இளம் இத்தாலி' இயக்கத்தை சேர்ந்தவர் ஆவார்.
(அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
(இ) கூற்று சரி, காரணம் தவறு (ஈ) கூற்று தவறு, காரணம் சரி
18. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிக்கையின் பெயர் யாது?
(அ) அவந்தி (ஆ) ப்ராவ்தா (இ) மார்க்சிஸ்ட் (ஈ) மெயின் காம்ப்



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam

www.freetnbooks.com

19. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் ________ ஆவார்.
(அ) யமமோட்டோ (ஆ) ஸ்கூஸ்னிக்
(இ) இரண்டாம் கெய்சர் வில்லியம் (ஈ) ஹிரோஹிடோ

20. பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியானவற்றைத் தேர்வு செய்க.

| | | | | அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|---|---|---|---|
| (அ) இந்தோனேசியா | - 1. ஜவஹர்லால் நேரு | | | | | | | |
| (ஆ) எகிப்து | - 2. டிட்டோ | அ) | | 5 | 3 | 4 | 2 | 1 |
| (இ) கானா | - 3. குவாமி நக்ருமா | ஆ) | | 1 | 3 | 2 | 4 | 5 |
| (ஈ) யுகோஸ்லாவியா | - 4. கமால் அப்துல் நாசர் | இ) | | 5 | 4 | 3 | 2 | 1 |
| (உ) இந்தியா | - 5. சுகர்னோ | ஈ) | | 1 | 2 | 3 | 4 | 5 |

## பகுதி - II

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **7 x 2 = 14**

21. அவுரி கலகம் (இண்டிகோ) குறித்து குறிப்பு வரைக.
22. மிதவாத தேசியவாதிகளின் "இறைஞ்சுதல் கொள்கை" (The mendicant policy) என்றால் என்ன?
23. பி.ஆர். அம்பேத்கரால் வழிநடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன?
24. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என்.டாடா அழைக்கப்படக் காரணம் என்ன?
25. கேப்டன் மோகன் சிங் எவ்வாறு இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்தினார்?
26. இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது?
27. நாடு விடுதலை அடைந்த போது இந்திய பொருளாதாரத்தின் நிலை குறித்து ஒரு குறிப்பு வரைக.
28. பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
29. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
30. இரண்டாம் உலகப்போரில் ஈடுபட்ட நேச நாடுகள் மற்றும் அச்சு நாடுகளின் பெயர்களைக் கூறுக.

## பகுதி - III

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **7 x 3 = 21**

31. பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?
32. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
33. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களைப் பற்றி விவாதிக்கவும்.
34. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு வரைக.
35. பஞ்சசீலக் கொள்கையின் 5 கோட்பாடுகளை விளக்குக.
36. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?
37. 1492-இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.
38. அமெரிக்கப் புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.
39. மிக ஆபத்தான 'U' படகுகள் மற்றும் 'Q' கப்பல்கள் பற்றி நீவிர் அறிவது என்ன?
40. பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) பற்றி குறிப்பு வரைக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7 x 5 = 35**

41. (அ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக. **(அல்லது)**
(ஆ) இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதை தகுந்த காரணத்தோடு விளக்குக.
42. (அ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக. **(அல்லது)**
(ஆ) ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது?
43. (அ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி. **(அல்லது)**
(ஆ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.
44. (அ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும். **(அல்லது)**
(ஆ) பாண்டுங் பேரறிக்கை பற்றி விரிவாக விளக்குக.
45. (அ) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க. **(அல்லது)**
(ஆ) இத்தாலிய மறுமலர்ச்சி பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பு என்ன?
46. (அ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது? **(அல்லது)**
(ஆ) இரண்டாம் உலகப்போரில் நடைபெற்ற நிகழ்வுகள் ஐந்தினை கோடிட்டுக் காட்டுக.
47. (அ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக. **(அல்லது)**
(ஆ) பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:
(i) அமிர்தசரஸ் (ii) சென்னை (iii) லக்னோ (iv) கான்பூர் (v) பெல்காம்



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam